# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்**

[*2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 46/2015*

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "14உ ஆம், 15 ஆம், 16 ஆம், 17 ஆம் அல்லது 22 ஆம் பிரிவுகளின்" என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "15 ஆம், 16ஆம், 17 ஆம் அல்லது 22 ஆம் பிரிவுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;*

*(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"(1அ) இச்சட்டத்தின் 14உ ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".*

2-PL 009680 -950 (2016/01)

(3) ஆறாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(7) இலங்கை நீர்ப்பரப்புகளின் எல்லைகளுக்கப் பால் இச்சட்டத்தின் 61(1)(ந) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன் மேல், இரண்டாண்டுகளை விஞ்சாத வொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இதற்கான அட்டவணையின் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளுக்குக் குறையாததாகவுள்ளவொரு குற்றப் பணத்துக்கு அல்லது இயைபான பிடிக்கப்பட்ட மீனின் பெறுமதியினது ஐந்து மடங்குகளுக்குக் குறையாத தாகவுள்ளவொரு குற்றப்பணத்துக்கு, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அதற்கு ஆளாதலும் வேண்டும்.

**அட்டவணை**

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| **மீன்பிடி வள்ளமொன்றின் நீளம்** | **குற்றப்பணங்கள்** |
| 10.3 மீற்றர்களுக்கு மேற்படவும் 15 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூபா 1.0 மில்லியன் |
| 15 மீற்றர்களுக்கு மேற்படவும் 24.0 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூபா 1.5 மில்லியன் |
| 24.0 மீற்றர்களுக்கு மேற்படவும் 45.0 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூபா 25 மில்லியன் |
| 45.0 மீற்றர்களுக்கு மேற்படவும் 75.0 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூபா 50 மில்லியன் |
| 75.0 மீற்றர்களுக்கு மேற்பட்டது | ரூபா 100 மில்லியன்.". |

(8) இச்சட்டத்தின் 61 (1) (ப) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனுமாள் இயைபான பிடிக்கப்பட்ட மீனின் பெறுமதியினது ஐந்து மடங்குகளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "இயைபான பிடிக்கப்பட்ட மீன்" என்பது, தவறு புரியப்பட்ட நேரத்திலுள்ளதும் இச்சட்டத்தின் 52உ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழாமொன்றினால் பெறுமதி மதிக்கப்பட்டதுமான பிடிக்கப்பட்ட மீனின் தொகை என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆ, 52இ, 52ஈ மற்றும் 52உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 52ஆ, 52இ, 52ஈ மற்றும் 52உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"தண்டமொன்றை விதித்தல்.*

52ஆ. (1) உரிமமளிக்கப்பட்டவராகவுள்ள எவரேனுமாள் இச்சட்டத்தின் 14அ, 14உ, 14ஊ அல்லது 14எ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் 61(1)(ந) அல்லது 61(1) (ப) என்னும் பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றியுள்ளாரென நம்புவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு போதிய சான்றுள்ளவிடத்து, அவருக்கு இச்சட்டத்தின் 52உ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் விதப்புரையின் மீதும், முதலாவது தவறொன்றின் விடயத்தில், தவறானது எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதென்பதைக் கருத்திற்கொண்டு மற்றும் தண்டமொன்றை விதிப்பது தோதாகவிருப்பின், அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்

அத்தகைய ஆளைத் தோன்றும்படியும் தண்டமொன்று ஏன் விதிக்கப்படுதலாகாது என்பதற்கான காரணத்தைக்காட்டும்படியும் அவரைத் தேவைப்படுத்தி, அத்தகைய ஆளுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்விக்கலாம்.

(2) அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒருமாதத்தினுள் அந்த அறிவித்தல் எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள் இச்சட்டத்தின் 14அ, 14உ, 14ஊ மற்றும் 14எ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் 61 (1) (ந) அல்லது 61(1) (ப) என்னும் பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாக அவர் செயலாற்றினாரென ஏற்றுக்கொள்ளுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆள் ஒரு நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய எந்த ஆகக்கூடிய குற்றப்பணத்துக்கு அவர் ஆளாகவிருப்பாரோ அந்த ஆகக்கூடிய குற்றப்பணத்தின் மூன்றிலொன்றை விஞ்சாதவொரு பணத்திலான தண்டத்தை அவர் அந்த ஆளுக்கு விதித்தல் வேண்டும்.

(3)(அ) எந்த ஆளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆள் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் தோன்றி, தண்டம் விதிக்கப்படுவதற்கெதிராகக் காட்டுவதற்கான காரணம் தமக்குண்டு எனக் கூறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப்பட்ட முறையில் அக்கருமத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு உடனடியாக நடவடிக்கையெடுக்கலாம்.

(ஆ) கொடுக்கப்பட்ட காரணங்கள் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படாத விடத்து, அவர் அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தை விதிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் 14அ, 14உ, 14ஊ அல்லது 14எ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளின் அல்லது இச்சட்டத்தின் 61 (1) (ந) அல்லது 61 (1) (ப) என்னும் பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் மீறுகைக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் எவரேனுமாளுக்குத் தண்டமொன்றை விதிக்குமிடத்து, அத்தகைய ஆளுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தலொன்று சேர்க்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய முடிபு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(6) செயலாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபையும் தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளையும் கவனத்துட் கொண்டு அத்தகைய மேன்முறையீட்டின் மீது முடிபொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், ஒன்றில் -

(அ) மேன்முறையீட்டை அனுமதிக்கலாம், மாற்றலாம் அல்லது வேறுபடுத்தலாம் மற்றும் அதற்கிணங்கச் செயலாற்றும் படி பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம் ; அல்லது

(ஆ) கூறப்பட்ட காரணங்களுக்காக மேன் முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, செயலாளரினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற ஆளுக்கு அவரின் பணிப்பை அறிவித்தலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழான ஒவ்வோர் அறிவித்தலும் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், பதிவஞ்சலில் அனுப்பப்படின் அல்லது கடைசியாக அவர் வசித்ததாக அறியப்பட்ட இடத்தில் வெளிக்காட்டிவைக்கப்படின், அது அவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(9) இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட தவறாளர் அத்தகைய தவறுபுரிந்தமையை ஏற்றுக்கொண்டு அத்தகைய தண்டத்தைச் செலுத்தியுள்ளவிடத்து, அதே தவறு தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

மேன்முறையீட்டுரிமை.

52இ. செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற எவரேனுமாள் சட்டப்பிரச்சினையின் மீது, அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து

முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

ஊகம்.

52ஈ. மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் அத்தகைய மீன்பிடித் தொழிற்பாட்டின்போது ஒரு மணித்தியாலக் காலப்பகுதிக்கு மீன்பிடித்தொழிற் கண்காணிப்பு நிலையத்துடன் இணைப்பை வைத்திருப்பதற்குத் தவறுவாராயின் அல்லது கலன்கண்காணிப்பு முறைமையைத் தொழிற்படுத்துவதற்குத் தவறுவாராயின், அப்போது, முரணாக எண்பிக்கப்படும் வரை, அவர் இச்சட்டத்தின் 14அ, 14உ, 14ஊ அல்லது 14எ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின் 61(1) (ந) அல்லது 61(1) (ப) என்னும் பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளாரென ஊகிக்கப்படுகின்றது.

நிபுணர்கள் குழாத்தை நியமித்தல்.

52உ. (1) செயலாளரின் கலந்தாலோசனையுடன், கடல்சார் பொறியியல், சட்டம் மற்றும் கணக்கியல் என்ற துறைகளில் அறிவும் அனுபவமும் உடைய மூன்றாட்களைக் கொண்ட நிபுணர்கள் குழாமொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி எச்சூழ்நிலைகளின்கீழ் பணத்திலான தண்டமொன்றை எவரேனுமாளுக்கு விதிக்கவேண்டுமோ அச்சூழ்நிலைகள் பற்றி அவருக்கு விதப்புரைகளைச் செய்தல் அத்தகைய நிபுணர்கள் குழாத்தின் பணியாதல் வேண்டும்.

(3) அமைச்சர், நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த

அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அவர் தீர்மானிக்கவேண்டிய அத்தகைய பணத்திலான ஊதியத்தைக் குழாத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (தந) என்னும் பந்தியில் ''ஒழுங்கமைப்புகளைத் தாபித்தல் ; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒழுங்கமைப்புகளைத் தாபித்தல் ;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியின் (iv) ஆம் விடயத்தில் ''வழிமுறைகளைச் செயற்படுத்துதல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வழிமுறைகளைச் செயற்படுத்துதல் ; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

''(ப) மீன் மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியையும் இறக்குமதியையும் ஒழுங்குபடுத்துதல்.''.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்